# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப. (ஓ).

************

முறையீட்டு மனு எண் : 0028 / 2017 / ந

ஆணை எண் :125 / 2017

நாள் :20/05/2017

திரு. கே. சபாபதி,
தமிழ்நாடு பொது உரிமை பாதுகாப்பு சங்கம்,
சென்னை – 600 045. முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
தாம்பரம் நகராட்சி,
தாம்பரம், சென்னை – 600 045. எதிர் மனுதாரர்

## ஆணை

முறையீட்டு மனுதாரரது 13.02.2017 நாளிட்ட முறையீட்டு மனு தொடர்பாக முறையே இரு தரப்பினருக்குமான விசாரணைகள் நடத்தப்பட்டன. தாம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1, திருநீர்மலை ரோடு பகுதியிலுள்ள பர்மா காலனியில் பிளாட் எண் 4ல் கட்டிட அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டடம், அதிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் தேங்கியிருத்தல் ஆகிய பொருட்கள் தொடர்பாக சட்டப்படியான, தக்க துரித நடவடிக்கைகளை பொதுநலன் கருதி, போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளவும், எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரங்களை புகைப்பட ஆதாரங்களுடன் சமர்ப்பித்திடுமாறு தாம்பரம் நகராட்சி ஆணையருக்கு இம் முறைமன்ற நடுவ 20.03.2017 நாளிட்ட ஆணையில் உத்தரவிடப்பட்டது.

அதன்படி தாம்பரம் நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்:544/2017/எப்1 நாள்:02.05.2017 வரப்பெற்றது.

மேற்படி அறிக்கையில் புகாருக்குட்பட்ட கட்டிடம் குறித்து அதன் உரிமையாளருக்கு தொடர்புடைய சட்டப் பிரிவுகளின் கீழ் உரிய அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளது குறித்தும்,

அக்கட்டிட உரிமையாளர் மாலம்பலம் சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு (N.P.6684/2017) தொடர்ந்துள்ளது குறித்தும் அவ்வழக்கில் அக்கட்டிடத்தை தற்போது அகற்றுவதற்கான எவ்வித அதிரடி நடவடிக்கைகளும் (Lock & seal, demolition) மேற்கொண்டிடக்கூடாதென (no-coercive steps) ஆணையிடப்பட்டுள்ளது குறித்தும் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பர்மா காலனி பகுதியில் பிரதான மழைநீர் கால்வாய் (canne!) செல்கிறதெனவும் இந்த கால்வாய் 20 அடி அகலம் கொண்ட பெரிய கால்வாயாக உள்ளதெனவும் மழைக்காலங்களில் மழைநீரானது இப்பகுதி வாழ் குடியிருப்புகளுக்குள் செல்லாத வண்ணம் உயரமான தற்காப்பு சுவர் (Retaining wall) ரூ.9.70 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கால்வாயின் ஒரு புறம் மெப்ஸ் நிறுவனத்தின் சுற்றுச்சுவர் உள்ளதெனவும்,
மறு புறம் நகராட்சியால் தற்காப்பு சுவர் அமைக்கப்பட்டு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

புகார் வரப்பெற்ற தேதியிலிருந்து நகராட்சியால் தொடர்ந்து தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகவும், கட்டிட உரிமையாளரின் சிறப்பு சீராய்வு மனு மீது அரசு செயலர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை வழங்கும் உத்தரவுகளுக்கிணங்கியும், நீதி மன்ற உத்தரவின்படியும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென நகராட்சி ஆணையரால் உறுதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் தடுப்புச்சுவர் பணிகள் தொடர்பான ஆவணங்கள் / புகைப்படங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் நீதி மன்ற ஆணைகளின்படி தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும், புகாரில் தெரிவிக்கப்பட்டது போல் கழிவு நீர் குடியிருப்பு பகுதியில் தேங்கா வண்ணம் தக்க நடவடிக்கைகளை உறுதி செய்துகொள்ளுமாறும் தாம்பரம் நகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவத்தால் ஆணையிடப்படுகிறது. மேலும் கழிவு நீர் தேங்காதவாறு அகற்றப்படும் பணியினை தொடர்ந்து முறையான கண்காணிப்பும் மேற்கொள்ளப்படவேண்டுமெனவும் வலியுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

**2017 ஆம் ஆண்டு மே திங்கள் 20 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.**

**/ஓம்/**

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.**

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

செயலாளர் 23.5.17

23.5.17

23.5.17

பெறுநர்

1.நகராட்சி ஆணையர்.
தாம்பரம் பெரு நகராட்சி.
தாம்பரம், சென்னை – 600 045.

2.திரு. கே. சபாபதி.
மாநில தலைவர்.
தமிழ்நாடு பொது உரிமை பாதுகாப்பு சங்கம்,
சண்முகம் ரோடு, ரிலையன்ஸ் இன்சூரன்ஸ்,
மேற்கு தாம்பரம், தாம்பரம்,
சென்னை – 600 045.

3.நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர்,
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனரகம்,
செங்கற்பட்டு மண்டலம் – தாம்பரம்.